இதழ்-59

01.05.2023

# தூமி

பல்சுவை மின்னிதழ்




பெருவெள்ளத்திற்கான பயணம்

# சீர்படுத்தும் சிறைச்சாலை நூலகங்கள்

ஆசிரியர் பதிவு


குற்றத்திற்கான தண்டனைக்கு முக்கியத்துவம் வழங்குமளவிற்கு நாம் குற்றவாளிகளின் கல்வி, புனர்வாழ்வு மற்றும் தண்டனைக் காலத்தைப் பயனுள்ள முறையில் செலவிடுதல் என்பன பற்றி அக்கறைப்படுவதில்லை. குற்றவாளிகளை சிறைச்சாலைக்கு அனுப்புவதன் அடிப்படை நோக்கமே அவர்கள் திருந்தி வாழ்க்கையை வாழ கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். சிறைக்கூடங்கள் குற்றவாளிகளை மேலும் குற்றவாளிகளாக்கும் இடங்களாக இருக்கக் கூடாது. அதோடு தகவல்களை அறிவது ஒருவனது உரிமை. அந்த உரிமை சிறைச்சாலைக்குள்ளும் உயிர் வாழ வேண்டியது அவசியம்.

ஒவ்வொரு கைதியின் வாழ்க்கையும் அனுபவங்களின் ஊற்று. அதனால்த்தான் வெளிநாடுகளில் சிறைவாசிகள் பலர் புத்தகங்களை, சுயசரிதைகளை எழுதியிருக்கிறார்கள். சிறைச்சாலைக்குள் வாசிப்பதற்கு நிறையக் கைதிகள் இருக்கிறார்கள். அதேநேரம் அவர்கள் வாசிக்கவும் நூல்கள் அவசியம். பிழையான சேர்க்கைகளாலும், சரியான வழிகாட்டலும் இன்றி தடம்மாறி குற்றம் புரிந்து தண்டனை அனுபவிக்கும் கைதிகளில் ஒரு சிலரையாவது புத்தகங்கள் மாற்றிவிடக் கூடுமல்லவா? தண்டனைக்காலம் முடிவடைந்து அவர்கள் வெளிவரும் போது அவர்கள் எண்ணங்களும் செயல்களும் மேம்படக்கூடுமல்லவா?

“ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன” எனும் கூற்றுக்கு அமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 2500 புத்தகங்களைக் கொண்டு 08.04.2023 அன்று திறக்கப்பட்ட இந்த நூலகம் இலங்கையின் முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட சிறைச்சாலை நூலகம் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியில் நிறைய புத்தகங்கள் இருக்கின்றன. நூலகங்களும் இருக்கின்றன. ஆனால் மனிதர்களுக்கு நேரம் இருப்பதில்லை. இதனால்

*(4ம் பக்கம் பார்க்க. . )*



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
வ.டியனி

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்தவை...

05 உழைப்பாளிகள் எல்லோருமே பங்காளிகள்
10 சித்திராங்கதா
15 இலங்கையின் உருளைக்கிழங்கு சிப்ஸ்
16 பாட்டுப் பாடவா..?
17 கீரிமலையில் நாவலர்
18 சுட்டெரிக்கிறது வெயில்
21 சிறந்ததொரு தொழிலாக முயற்சியாண்மை
30 கண்ணீரில் கரைந்த தேசம் - நூல் அறிமுகம்
33 இலங்கைக்கு ஏப்ரல் மாதம் வந்த பிரபலங்கள்
34 பரியாரியார் Vs அய்யர்
37 மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்
37 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் 2023

வாசகர்கள் அனைவருக்கும்
இனிய உழைப்பாளர் தின
நல்வாழ்த்துக்கள்

*(ஆசிரியர் பதிவு தொடர்ச்சி..)*

புரட்டப்படாத பக்கங்களோடு நூல்களும், வற்றிய வாசகர்களோடு நூலகங்களும் காணப்படுகின்றன. ஆனால் சிறைச்சாலையில் அப்படியில்லை. அவனுக்கு அங்கே நிறைய நேரம் இருக்கிறது. அங்கே புத்தகங்களும் இருந்துவிட்டால் தெரிந்தோ தெரியாமலோ அவன் அப்புத்தகங்களை வாசிக்க தொடங்கி விடுவான். இந்த வாசிப்பின் மீது ஒரு நாட்டம் வந்துவிட்டால் குற்றச் செயல்கள் மீதான அவனது நாட்டம் குறைந்துவிடும்.

இலங்கையில் சிறைச்சாலை நூலகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடனேயே இயங்குகின்றன. அவை பெரும்பாலும் நூலக நியமங்களுக்கேற்ப ஒழுங்கமைக்கப் படுவதில்லை. நன்கொடை மூலம் கிடைக்கும் நூல்கள் மற்றும் தளபாடங்களை கொண்டவையாகவே அவை காணப்படுகின்றன.

இந்நிலையில் இலங்கையின் சிறைச்சாலை வரலாற்றில் முதன் முதலாக ஒழுங்கமைக்கப்பட்ட நூலகம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. பல தன்னார்வலர்களின் பங்களிப்புடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தினர் இந்தச் சிறைச்சாலை நூலகத்தை உருவாக்கியுள்ளனர். இந்நூலகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும், பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பல்கலைக்கழகங்களின் சமூக பங்களிப்பு பேசு பொருளாகியுள்ள இந்த காலத்தில் யாழ் பல்கலைக் கழகத்தின் இந்த முயற்சிக்கு தூமி தலை வணங்குகிறது. கைதிகளின் புனர்வாழ்விற்கும், நேர் சிந்தனைகளுக்குமான நூல்களை மட்டுமே அங்கே கிடைக்கச் செய்ய வேண்டியதும் முக்கியமானது. நூல்கள் அன்பளிப்பு செய்பவர்களும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். வாசிக்கும் கைதிகளின் வாழ்வில் சில நூல்கள் திருப்புமுனையாக அமையலாம். அவற்றையும் ஆவணப்படுத்துங்கள். வரப்போகும் வாசகர்களுக்கு அந்த ஆவணம் வழி காட்டியாக அமையலாம்.

அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, கிழக்கு தீமோர் போன்ற நாடுகளில் 20.04.2023 தென்பட்ட சூரிய கிரகணத்தின் சில காட்சிகள்



# உழைப்பாளிகள் எல்லோருமே பங்காளிகள்

மனிதனின் அடிப்படைத் தேவைகள் மூன்று என்கின்றனர். உணவு, உடை, உறையுள். இந்த மூன்றினால் மட்டும் ஒரு சமகால மனிதனை திருப்திப்படுத்த முடியுமா? அவனிற்கு உடற்பசிகளை விட மனப்பசிகள் அதிகம். அவன் மனப்பசிகளை பட்டியல் போட தொடங்கினால் நம் நாட்டின் காகித வறுமை இன்னும் கனத்துவிடும்.

ஆனால் சமரசம் செய்து கொள்ளாமல் வளர்கின்ற அவனது ஆசைகளை ஆடம்பரம் என்றோ அநாவசியம் என்றோ நாம் முற்றாய் புறந்தள்ளிவிட முடியாது. ஒரு வகையில் பார்த்தால் அவன் தன் ஆசைகளும் தேவைகளும் குறித்து அக்கறை கொள்ளாதிருந்தால் இன்றும் நாம் இலைதழைகளை கட்டிக்கொண்டு காட்டில் இடிக்கும் மழைக்கும் நடுங்கியபடி ஆகாரத்திற்காய் ஒரு மானைத் துரத்திக் கொண்டிருந்திருப்போம். நாம் இத்தனை தூரம் முன்னோக்கி வந்து விட்டோம் என்றால் அது மனிதனின் அடங்காத ஆசைகளை நோக்கிய பயணத்தால்தான் என்பதை மறுப்பதற்கில்லை.

மனிதன் ஓடிக்கொண்டிருந்தான் என்பது உண்மைதான். ஆனால் அவன் மட்டும் தனியாக ஓடினானா? ஒரு தனி மனிதனால் மட்டுமே இதை சாதிக்க முடிந்ததா? நிச்சயமாக இல்லை. எல்லா முயற்சிகளையும் ஒரே மனிதன் எடுக்கவில்லை. வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு துறையில் முயன்றார்கள். பலன் எல்லோருக்கும் பொதுவாய் கிடைத்தது.

மனிதன் சமூகமாக வாழத்தொடங்கியதன் தாற்பரியமும் இதுதான். எல்லாம் எல்லோராலும் முடியாது. ஆனால் எல்லாம் எல்லோர்க்கும் கிடைக்க வேண்டும். இந்த வழியில் தான் அவனிற்கு சமூகம் என்கிற சாதனம் கைகூடியது.

காலையில் நாம் அருந்துகின்ற தேநீர் தான் நமது காலையை புத்துணர்ச்சியாக்குகிறது என்றால் அதனை பயிரிட்டவர்கள் தொடங்கி கடைசியில் தேநீராய் எம் கைகளை அடையும் வரை உழைப்பின் நீளம் நீள்கிறது. நாம் செல்லும் பேருந்து, உண்ணும் உணவு, உடுத்தும் உடை, இருப்பிடம் என அனைத்துமே யாரோ



ஒருவரது உழைப்பில் உருவானது என்பது யாவரும் உணர்ந்த உண்மைதான்.

இவற்றுக்கெல்லாம் நாம் பணம் கொடுக்கின்றோம் தானே என்பீர்கள். பணம் மனதை திருப்திபடுத்தும் ஒரு காகிதமே அன்றி அவர்கள் உழைப்பிற்கு அதை ஈடு சொல்ல முடியுமா? உழைப்பிற்கேற்ற ஊதியம் என்பதை உலகில் யாராலும் இங்கு கொடுக்க முடியாது.

நீங்களே சொல்லுங்கள். உங்களிற்கு தேவையான உணவை நீங்கள் மட்டுமே உற்பத்தி செய்தாக வேண்டும் என்றொரு நிலை வந்தால் என்ன செய்வீர்கள்? நமக்கான வாய்கரிசியை கூட நம்மால் உருவாக்கி வைக்க முடியுமா? நாம் வாழ்கிற வீட்டை நாம் மட்டும் தான் கட்டியாக வேண்டும் என்றானால் என்ன செய்வது? நம் கட்டிய வீட்டிலேயே இறுதியில் நம் கல்லறையை வைக்க வேண்டியதுதான். நாம் உடுத்தும் உடைகளை நாமே தறிக்க வேண்டுமென்றால் என்ன செய்வது? மறுபடியும் இலைதழைகள் தான். வேறு வழியில்லை. ஆனால் இவை எல்லாவற்றையும் ஒரு மனிதன் பிறக்கும் முன்னரே தயார் நிலையில் வைத்துக் காத்திருக்கிறது இந்த சமூகம்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் குறைந்த பட்சம் ஒரு லட்சம் பேரின் உழைப்பையாவது பயன்படுத்தியிருப்பான் என்கிறது கிரெக்க தத்துவம்.

எட்டு மணி நேரம் உழைப்பு , எட்டு மணி நேரம் பொழுதுபோக்கு, எட்டு மணி நேரம் ஓய்வு என்ற குரல் அங்கிங்கெனாதபடி உலக நாடுகளில் ஒலித்த தினம் தான் மேதினம். அன்று ஒலித்தவர்களின் எண்ணற்ற குரல் வளைகள் நெறிக்கப்பட்டன.

ஒலித்த குரல்களின் உயிர்களைக் குடித்த குண்டுகள் பல. அடித்து நொறுக்கப்பட்டு முடமாக்கப்பட்ட உயிர்கள் பல.

தங்கள் இன்னுயிரை ஈந்து அவர்கள் தந்த அந்த எட்டு மணி நேர உத்திரவாதத்தால் தான் இன்று உலகத் தொழிலாளர்கள் அனைவரும் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி கடந்து போன மனித சமுதாயத்தின் எண்ணற்ற தியாகங்களால் தான் இன்றைய மகிழ்வான வாழ்வு நமக்கு சாத்தியமானது.

பூமியில் பிறக்கும் போதே முதன்முதலாய் தொட்டு அரவணைத்த தாதிப் பெண் தொடங்கி அனைவரினதும் உழைப்பிற்கு கடன்பட்டவர்களாகவே நம் வாழ்வு தொடங்குகிறது. அந்தக் கடனை எம் வாழ்வு முடிவதற்குள் அடைப்பது என்பதுதான் எம் வாழ்வின் திறந்த சவால்.

உழைப்பது என்பது எம் ஊதியத்திற்காக அல்ல. நம் கடனை அடைப்பதற்காக என்பதை நாம் எப்போதும் சிந்தையில் நிறுத்தி வைக்க வேண்டும். இயற்கையில் எதுவும் தன் உழைப்பை தனக்காக

வைத்திருப்பதில்லை. எந்த நதியும் தனது நீரைக் குடிப்பதில்லை. எந்த மரமும் தன் கனிகளை தான் உண்ண வைத்திருப்பதில்லை. எந்த விளக்கும் தன் ஒளியை தனக்காக மறைத்துக் கொண்டதல்ல. ஆனால் மனிதனிற்கு மட்டும் தனக்கு என வைத்துக் கொள்ளும் ஒரு விபரீத பழக்கம் உள்ளது. இந்த மனித சமுதாயத்தில் தான் ஒரு கடனாளி என்பதை அவன் பல நேரங்களில் மறந்து விடுகிறான். அவன் உழைப்பது என்பதை தன் கடனை அடைக்க என்று அவன் உணர்ந்து கொண்டால் உழைப்பை எண்ணிய கர்வமோ பணத்தை எண்ணிய பற்றோ அவனிடத்தில் தங்காது.

தொழில் என்பது இங்கு வழிபாடு. உழைப்பு ஒரு சாதனை. தன் உழைப்பால் உணவு உற்பத்தி செய்து, வியர்வையால் உணவை இங்குள்ளோர் உருவாக்குவர். அங்கனம் உருவாக்கிய உணவை நகரம்-கிராமம், ஏழை-பணக்காரன், முதலாளி-தொழிலாளி, உடல் உழைப்பு-மூளை உழைப்பு, விவசாயத் தொழிலாளி-ஆலைத் தொழிலாளி என்று பாகுபடாமல் அனைவரும் பகுத்துண்ண பகிர்ந்தளிப்பர். அதுவே அவர்களது ஆத்மசாதனையாக எண்ணுவர். அந்த உழைப்பில் தெரியும் ஆத்ம திருப்தியை தரிசிக்க விரும்பினால் அட்டையை பாருங்கள்.

மேற்கத்திய நாடுகளின் தொழிலாளர் குறித்த பார்வைக்கும் நம் இனத்தின் தொழிலாளர் குறித்த பார்வைக்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கிறது. அங்கே தொழில் என்பது ஒரு சாபம். வேறுவழியின்றி மேற்கொள்ளப்படும் ஒரு கடின சூழல். அதிலிருந்து பெறும் விடுப்பே சந்தோஷம். ஏனெனில், மேற்கத்திய இறையியலும் தொழில் செய்வதை, உழைப்பதை ஒரு சாபமாகவே கருதுகிறது. மேற்கத்திய இறையியல் காட்டும் சொர்க்கத்தில் யாரும் உழைக்க தேவையில்லை.

ஆனால், நம் இனத்தில் எம் முன்னோர்களிடத்தில் உழைப்பு என்பது ஒரு படைப்பூக்கச் செயல். இறைவனே ஆதி தொழிலாளிதான்.



உணர விரும்பினால் கர்வம் ஒழித்து கடன் என கருதி உழைக்கத் தொடங்குங்கள்.

நம்மை போல உழைத்து நமக்காகவும் உழைக்கும் எல்லோருக்கும் உழைப்பாளர் தினம் என்றொரு நாள் விடுமுறை கிடையாது. உங்கள் வீட்டு சமயலறையோ நாற்று நட்ட வயல் வெளியோ உழைப்பாளர் தினத்திற்காய் விடுமுறை எடுத்துக் கொள்வதில்லை. ஒவ்வொரு நாளுமே இவர்களுக்கு உழைப்பாளர் தினம் தான்!! உழைத்தால் தான் அவர்களிற்கு அது ஒரு தினம்.

இது எல்லோருக்குமான உலகம். எல்லோருக்கும் நல்ல வாழ்க்கை கிடைக்க நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும். இந்த மே தினத்தில் நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டிய கேள்வி இது. நம் கடனை அடைக்க நாம் முயற்சிக்க தொடங்குவோம்.

*அனைத்து உழைப்பாள நண்பர்களுக்கும் இனிய மே தின நல்வாழ்த்துக்கள்!*

## இலங்கையில் கப்பல் போக்குவரத்து பொருட்களுக்கான வளாகம்

தெற்காசியாவின் மிகப்பெரிய “கப்பல் போக்குவரத்து பொருட்களுக்கான வளாகம்” இலங்கையில் அமைக்கப்படவுள்ளது.

இலங்கை அரசின் 15% பங்கூடன் அக்சஸ் நிறுவனத்தின் 15% பங்கு அடங்கலாக சீன நிறுவனம் ஒன்றின் 70% பங்கு முதலீட்டுடன் சுமார் 392மில்லியன் டொலர் பெறுமதியில் குறித்த வளாகம் அமைக்கப்படவுள்ளது.

சுமார் 530,000 கியுபிக் மீட்டர் சரக்கை கையாளும் வகையில் 8 மாடியுடன் குறித்த வளாகம் கொழும்பு துறைமுகத்தில் அமைக்கப்படவுள்ளது.

கப்பல் வலையமைப்பு இணைப்பின் அடிப்படையில் கொழும்பு துறைமுகம் தற்போது உலகின் தலைசிறந்த 13 துறைமுகமாக உள்ளது. சரக்கு கையாளும் திறன் அதிகரிக்கும் பொழுது நாம் மேலும் வலுபெற முடியும்.

இந்தியாவின் மேற்கு கடற்கரை துறைமுகங்களுக்கான சரக்கு பறிமாற்றம் அதிகரிப்பதுடன் பங்களாதேஷ், மியன்மார் நாடுகளின் தேவைகளையும் எம்மால் பெற முடியும். இதனால் பல பில்லியன் ரூபாய் வருட வருமானம் அதிகரிக்கும்.



# இலங்கையில் மிகப்பெரிய வெளிநோயாளர் பிரிவு

8 மாடிகள், 50000 சதுர மீட்டர் பரப்பளவு மற்றும் 6000 நோயாளிகள் தினசரி அணுகும் வசதியுடன் இலங்கையில் இதுவரை இல்லாத மிகப்பெரிய சீன-எய்ட் திட்டமான (அன்பளிப்பு) இலங்கை தேசிய மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு (OPD) கட்டிடத்தின் பணிகள் யாவும் முடிவடைந்துள்ளமையால் இன்றைய தினம் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. இது விரைவில் பொதுமக்களுக்கு திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.








# தமிழின் இதய அஞ்சலிகள்

குப்பிழான் ஐ.சண்முகன் என்ற புனைபெயரால் அனைவராலும் நன்கு அறியப்பட்ட குப்பிழான் மண்ணின் தனிப் பெரும் அடையாளமாகவும், சிறுகதை உள்ளிட்ட பல்துறை ஆளுமையாளராகவும், அனுபவப் பெட்டகமாகவும் திகழ்ந்த பிரபல எழுத்தாளர் ஐ.சண்முகலிங்கம் (குப்பிழான் ஐ.சண்முகன்) அவர்கள் (24.03.203) அதிகாலை-04 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தனது 76 ஆவது வயதில் காலமானார்.









அவரது மறைவு ஈழத்து இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

56



# சித்திராங்கதா

காவ்யமோகன்

## நம்புகிறேன்....!

நல்லூர்க்கோட்டை அரண்மனையின் அந்தப்புரத்திற்கு அருகில் புதிதாய் ஒரு சிறைக்கூடம் உருவாகியிருந்தது. அது மற்ற சிறைக்கூடங்களை மாதிரி அல்லாமல் கொஞ்சம் விசேடமாக அமைக்கப்பட்டிருந்தது.

யாருக்காக அந்த விசேட சிறைக்கூடம் என்று நீங்கள் ஊகித்திருப்பீர்கள். நல்லை அரண்மனையில் தனிப்பெருங் கலாராணியாய் அரங்கேற்றம் காண காத்திருந்த ஆடலரசி சித்திராங்கதா தான் இன்று அதே அரண்மனையில் விசேட சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறாள்.

சிறைப்பிடிக்கப்பட்ட சித்திராங் கதாவை சந்திக்க ராணி மஞ்சரிதேவி சிறைக்கூடம் நோக்கி வந்திருந்தார். சிறைக்கூடத்தின் மேற்சுவரில் நனைந்த கண்கள் குத்தி நிற்க சித்திராங்கதா ஒரு மூலையில் அமர்ந்திருந்தாள். அவள் சிந்தனையை குழப்பிய ஆரவார ஓசைகளில் மகாராணி மஞ்சரிதேவி வருகிறார் என்பதை அறிந்து கொண்டாள்.

“வாருங்கள்! நல்லை இராச்சியத்தின் மகாராணியே வாருங்கள்.. தங்கள் இராச்சியத்தில் முதன்முதலாய் ஒரு மங்கையை - அதுவும் ஆடற்கலையின் அதிரூப சுந்தரியை சிறைப்பிடித்திருக்கும் விந்தையை காண ஆவலோடு வந்தீர்களா? வாருங்கள்! காணுங்கள்!”

என்று கூறுகையில் சித்திராங்கதாவின் கண்கள் பெரிதாய் விரிந்திருந்தன.

மலர்ந்த முகம் மாறாமல் அவள் அருகில் வந்து அமர்ந்தார் மஞ்சரி தேவி.

“சித்திராங்கதா.. நீ ஆடலிலும் அழகிலும் அதிரூபசுந்தரி தான்.அதை இந்த நல்லை தேசப் பெண்கள்

எவராலும் மறுக்க முடியாது. இப்போது சிறையில் உன்னை வைத்திருப்பது கூட உன்னைப் போன்ற பொக்கிசத்தை நாம் இழந்துவிடக்கூடாது என்பதற்காகவே. ஆம் சித்திராங்கதா உன்னை காக்க எண்ணியே உண்மையில் உன்னை சிறைப்பிடிக்க நேர்ந்தது என்பதை மறந்துவிடாதே மகளே..”

“மகளா..? யாருக்கு யார் மகள்? நீங்கள் என் தாயா? அல்லது உங்கள் வயிற்றில் பிறந்தவள் நானா? உங்கள் மகளாக இருந்தால் இப்படித்தான் சிறையில் வைத்து அழகு பார்த்திருப்பீர்களா ராணி? அல்லது நீங்கள் சொன்னமாதிரி சிறையில் வைத்துத்தான் காவல் காத்திருப்பீர்களா தங்கள் மகளை? என் தாய் என்றோ இறந்து விட்டாள். அவள் இறந்ததற்குப் பிறகு இவ்வையத்தில் எனக்கு தாயென்று யாருமில்லை. இனி புதிதாய் யாரும் எனக்கு தாயாக பிறக்கவும் தேவையில்லை. தாங்கள் இந்த நாட்டின் மகாராணி. தங்கள் நாட்டில்- தங்கள் இராச்சியத்தில் கைதுசெய்யப்பட்ட முதல் பெண் கைதி நான். அவ்வளவே நமக்கான உறவாகும்.”

“ஆத்திரப்படாதே சித்திராங்கதா! உன் இந்த முன்கோபந்தான் அனைத்தையும் ஆபத்திற்கு அழைத்துச் சென்றுவிடுமோ என்று உன்னையும் இந்த நாட்டையும் எண்ணி நான் அச்சங் கொள்கிறேன். உனக்கு இதுபோலொரு துர்பாக்கியத்தை அளிக்க யாருக்கும் இங்கு சம்மதமில்லை. ஆனால் தற்சமயம் எங்களிடம் வேறு வழியில்லை சித்திராங்கதா! நீ எதற்காக இப்படி பிடிவாதம் பிடிக்கின்றாய்? உனக்காக குறைவில்லாத விசேட விருந்துகள் வழங்க ஆணையிட்டிருந்தேன். எதையும் உண்ண மறுத்து விட்டாய் என்றாள் சேவகி.. பிடிவாதம் கொள்ளாதே பெண்ணே.. இந்த நாட்டிற்காக எத்தனையோ பேர் செய்த தியாகங்களில் உன் தியாகமும் ஒன்றெனக் கொள்.”

அவசரமாக ராணியை திரும்பிப்பார்த்தாள் சித்திராங்கதா.

“தியாகமா? எது தியாகம் தேவி?.. சிறையில் ஓர் ஆடலரசியை அடைத்து வைத்துக் கொண்டு அவளை தியாகம் செய்யச் சொல்லி மன்றாடுவது ஒரு நாட்டின் மகாராணி செய்யும் காரியமா தேவி?.. தங்களை தலைசிறந்த ராணி என்று எல்லோரும் சொல்கிறார்கள்.. தங்களை காணாத வரை நானும் அதை உண்மை என்று தான் நம்பினேன். ஆனால் இப்போதுதான் தோன்றுகிறது. தேவி இராஜகாமினி வாழவேண்டிய வாழ்வை தட்டிப்பறித்திருக்கும் ஒரு மகாராணியைத்தான் நான் இப்போது சந்தித்திருக்கிறேன் என்று.”

“சித்திராங்கதா! யாருடைய வாழ்க்கையை யார் தட்டிப்பறித்தது? உண்மையை முழுதாய் அறியாமல் வார்த்தைகளை உதிர்க்காதே. மாதரசி கல்யாணி தேவியைப்பற்றி நீ அறிவாயா? இன்று நல்லை சிம்மாசனத்தில் முடிக்குரிய ராணியாக, ஈடு இணையற்ற மகாராணியாக இருந்திருக்க

வேண்டிய பெருமங்கையல்லவா அவர். அந்த மகாராணி வாழவேண்டிய பெருவாழ்வை அடியோடு அழித்த கூட்டத்தில் ஒருத்தி தான் நீ சொல்கிற இராஜகாமினி. அவளையா நீ நல்லவள் என்கிறாய்?"

"எல்லா உண்மையும் நானும் அறிவேன் ராணி. யாருடைய வாழ்வு யாரால் அழிந்தது என்று தெளிவாகவே எனக்கு தெரியும். இராஜகாமினி தேவி பற்றி தாங்கள் சொல்கிற அபாண்டங்களை மேலும் நம்புமளவிற்கு முட்டாள் இல்லை நான்."

"உன் சித்தத்தினை அந்தளவிற்கு சீர்குலைத்திருக்கிறாள் அவள். அவள் அதில் கைதேர்ந்தவள்தான். சரி போகட்டும்.. அவளை குற்றவாளி என்று உன்னிடத்தில் நிரூபிப்பதில் எனக்கு எந்த அவசியமும் இல்லை இப்போது. ஆனால் நம் இராச்சியத்தின் நன்மையை பற்றி மட்டும் நீ என்றும் மறந்துவிடக்கூடாது சித்திராங்கதா. இந்த நல்லை மண் மேடைகளில் உன் இசையும் அசைவும் இணைந்து பெரும் பிரளயத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தி வாய்ந்தது என்பதை நான் அறிவேன். அப்படிப்பட்ட கலையரசி நீ இப்படி நாட்டிற்கு களங்கமாற்றிவிடக்கூடாது பெண்ணே.. கொஞ்சம் சிந்துத்துப் பார்.."

"போதும் நிறுத்துங்கள் ராணி...." அவளுடைய தொனியில் எதிரிலிருப்பது ராணி என்பதை அவள் மறந்திருந்தாள்.

"களங்கமாற்றியது நானா? அல்லது நல்லை வேந்தரா என்பதை தாங்கள் சிந்தியுங்கள் கொஞ்சம்.. அரங்கேற்றத்தை வேண்டுமென்றே தடுத்து நிறுத்தியது யார்? நிறுத்தப்பட்ட பின்னும் மேலும் மேலும் துன்புறுத்தி இன்று சிறையில் கொண்டு வந்து என்னை அடைத்து வைத்திருப்பது தங்கள் துணைவரல்லவா? இதுவரை இந்த ஈழத்தில் எந்தப்பெண்ணும் செய்யாத அப்படி என்ன முதல் குற்றத்தை நான் செய்தேன்..?? சொல்லுங்கள் ராணி.. சொல்லுங்கள்..

நீங்கள் என்ன கூறினாலும் என் மனம் இதை நிச்சயம் ஏற்காது. என்னோடு சேர்த்து என் கலை - புகழ் - பெருமை - அத்தோடு இதுவரை நான் கொண்டிருந்த அனைத்து நம்பிக்கைகளையும் கூடவே இன்று சிறையில் அடைத்து விட்டீர்கள்! இனி இந்த ஆடலரசியிடம் என்ன இருக்கிறது தாங்கள் அபகரிப்பதற்கு? சொல்லுங்கள் ராணி!

ஒரே ஒரு நம்பிக்கை மட்டும் தான் உயிர் வாழ உத்தரவாதம் என்று நினைத்திருந்தேன். எல்லாவற்றையும் பொறுத்து அந்த ஒன்றை மட்டுமே நம்பிக் கொண்டிருந்தேன். ஆனாலும் எந்த பதிலும் தெரியாமல்- எந்த மறுமொழியும் அறியாமல் அந்த நம்பிக்கையும் காற்றில் கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்து காணமல் போய்க் கொண்டிருக்கிறது." அவள் குரல் அடைத்தது பேசமுடியாமல்..

"போரிற்குப் புறப்பட்டுவிட்ட தஞ்சை வீரரைப் பற்றிச் சொல்கிறாயா?"

வெளிப்படையாகக் கேட்டார் மகாராணி.

“ம்.... தாங்கள் ராணி அல்லவா? தங்களை விடவா நான் தந்திரக்காரி. தங்களிடமா என்னால் சூசகமாக பேச முடியும்? தாங்கள் அறியாத எதையுமா நான் புதிதாக கூற போகிறேன்..”

“நானும் வெளிப்படையாக கேட்கிறேன் சித்திராங்கதா. வருணகுலத்தான் தலை சிறந்த வீரன்.. அவன் இந்த நாட்டிற்காக படையெடுத்து வந்தவன். அவனை இப்படி எம் அழிவை நோக்கிய வழியில் வழிப்படுத்துவது சரி என்று நீ நினைக்கிறாயா? எதிரிகளை அந்த அளவிற்கு நம்புகிற நீ ஏன் இந்த இராச்சியத்தின் நன்மைகளை பற்றி மட்டும் சிந்திக்க மறுக்கிறாய் என்பதே எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது உண்மையில்”

“என் போக்கு உங்களிற்கு ஆச்சரியமாக இருக்கிறது.. இந்த மங்கையை இப்படி சிறையில் அடைத்த உங்கள் துணைவரின் வீரம் உங்களிற்கு ஆச்சரியமாக இல்லை. அப்படித்தானே ராணி.. உங்களிற்கு சரி என்று தோன்றுவது எவ்வளவு பெரிய அபத்தமாக இருந்தாலும் உங்களிற்கு ஆச்சரியமாக தெரியாது. ஆனால் எனக்கு சரி என்று படுகிற ஏதோ ஒரு சிறுசெயல் உங்களிற்கு அத்தனை ஆச்சரியமாக தெரிகிறது. அப்படித்தானே.”
ராணியின் கண்களை உற்று நோக்கி கேட்டாள் சித்திராங்கதா.

“ராணி இந்த நாட்டின் அழிவிற்காக நான் போராடுவதாக கூறுகிறீர்களே.. அதை மட்டும் திருத்திக் கொள்ளுங்கள்.. என் செவிகளில் விழும்படி இன்னொருமுறை அப்படிக் கூறாதீர்கள். இந்த நாடு மீது நான் கொண்ட பற்றை உங்களிடம் விளக்க எனக்கு அவசியமில்லை. வல்லோர்கள் சேர்ந்து என் நாட்டை காக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அல்லோர்களால் இந்த நாடு அழிந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு குடிமகளாய் இந்த நாட்டிற்கு நான் செய்ய வேண்டியதை செய்வேன். இராச்சியத்தில் இருக்கும் தாங்கள் தங்கள் இராச்சியத்தை காக்க நினைப்பீர்கள். நான் என் நாட்டையும் மக்களையும் காக்க நினைக்கிறேன். எனக்கு சரி என்று தோன்றுவதை செய்ய எனக்கு போதிய அறிவு இருக்கிறது. தங்களைப்போல் இராச்சியம் என்ற கூட்டுக்குள் என் சிந்தனையை முடக்க முடியாது. எனக்குத் தெரிகிறது. நான் செல்கிறவழி- சித்திக்கின்ற வழி சரியென்றே என்றும் நம்புகிறேன். யாரும் என்னை நம்பாவிட்டாலும் அது பற்றி எனக்குக் கவலை இல்லை.... தஞ்சை வீரரும்.....”
அதற்கு மேல் பேசமுடியாதவளாய் சித்திராங்கதாவின் கண்கள் கலங்கின.

கலங்கிய கண்களை துடைத்துக் கொண்டு மகாராணியை நோக்கிக் கேட்டாள்.

“ராணி.. எனக்கு ஒரே ஒரு வேண்டுகோள் தான் தங்களிடம்.. இன்று சிறையில் சித்திராங்கதா இருக்கிறாள்

என்பதை தஞ்சைவீரருக்கு மட்டும் தெரிவித்துவிடாதீர்கள். தெரிந்தால்... தெரிந்தால் என்ன செய்வார் என்பது எனக்குத் தெரியாது. அவர் என்ன நினைக்கிறார் என்பதையும் அறியேன் நான். ஆனால் இந்த விடயம் அவரிற்கு தெரியாமல் இருப்பது தான் எனக்கும் என் காதலுக்கும் இன்னும் உயிர் இருக்கிறது என்பதற்கு ஆதாரமாய் நினைக்கிறேன். தயவு செய்து சொல்லி விடாதீர்கள் ராணி...."

"உன் ஆழமான காதலை உணர்கிறேன் சித்திராங்கதா. தங்கள் காதல் வெற்றி பெற வேண்டும். அதில் யாருக்கும் மறுப்பு இல்லை.இருக்கக் கூடாது."

"நீங்களா கூறுகிறீர்கள் தேவி? இன்று கூறுகிறீர்கள் நாளை? நாளைய சூழலில் தங்கள் நாக்கும் வாக்கும் எப்படிமாறும் என்று யாருக்குத் தெரியும்? நல்லை அரசவையில் தங்கள் மகாராஜா நினைப்பது மட்டும்தானே நடக்கும். மகாராஜா ஒருவேளை தன் திருமகளிற்கும் தஞ்சைவீரரிற்கும் திருமணம் நடத்தி வைக்க நினைத்தால் கூட தாங்களும் அதற்கு "ஆம்" என்று தானே சொல்வீர்கள். இன்று என்னிடம் கூறியதை எல்லாம் அன்று மறந்து விடுவீர்கள் அல்லவா தேவி?"

"ராஜாவின் மகளா? ராஜாவின் திருமகள் என்று யார் இருக்கிறார் இங்கு?"ஆச்சரியமாக கேட்டார் ராணி.

சித்திராங்கதா சிரித்தாள்.

"தாங்கள் இப்போது கொள்கிற ஆச்சரியம் ராஜாவின் திருமகளை பற்றியா அல்லது அது சித்திராங்கதாவிற்கு தெரிந்தது பற்றியா என்பதை நான் அறியேன். ஆனால் என் மனதின் அச்சத்தை தாங்கள் அறிவீர்கள் என்று அறிவேன். இந்த அச்சத்தின் ஆழத்தில் என் காதலே வேரூன்றி நிற்கிறது. எல்லா வகையிலும் என்னை உருக்குலைத்தாலும் என்னிடம் அது மட்டுமே மிச்சமிருக்கும். நீங்கள் என்ன சமாதானம் சொன்னாலும் அதில் எந்த பிரயோசனமும் இல்லை என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் அதை உணர்ந்தால் விலகிச் செல்லுங்கள். இந்த சிறையை விட்டு விலகுங்கள். மகாராணி அதிக நேரம் சிறையில் ஒரு கைதியுடன் நேரங்கழிக்க வேண்டியதில்லை. செல்லுங்கள்."

"பெண்ணே.. வருணகுலத்தான் உன் மீது கொண்ட காதலின் உண்மையையும், நீ வருணகுலத்தான் மீது கொண்ட காதலின் ஆழத்தையும் நாங்கள் யாரும் ஒருபோதும் மறுதலிக்க முடியாது. உன் காதல் உன்னை இந்தளவிற்கு பயமுறுத்தத் தேவையில்லை. தேவையற்ற அச்சங்களை அகற்றிவிடு சித்திராங்கதா. உன் அச்சத்தை மறந்து துணிச்சலோடு இந்த நாட்டின் நன்மையை பற்றி மட்டும் யோசி. என்னை நீ தாராளமாக நம்பலாம்." சித்திராங்கதாவின் உள்ளத்து அச்சமே அவளை தவறான காரியங்கள் செய்ய வைக்கிறது என்பதை ராணி மஞ்சரி தேவி உணர்ந்து கொண்டார்.

“போதும்.. போதும்.. நம்புகிறேன்.. நம்புகிறேன்... தாராளமாக தங்களை நம்புகிறேன் ராணி. நம்புவது மட்டுமே இந்த சித்திராங்கதாவிற்கு பழக்கமானது. அன்று அரங்கேற்றம் நிகழ்வதாய் அரசர் இட்ட ஆணையை நம்பினேன். ஆனந்தமாய் அன்று அரங்கேற்றத்திற்கு தயாரானேன். தாயற்ற எனக்கு என்றும் துணை என் தந்தை என்று நம்பினேன். புரவியில் வந்த பெருவீரர் எனக்கானவர் என்று முழுதாய் நம்பினேன். நம்பினேன்.. நம்புகிறேன். நம்ப மட்டும் தானே இந்த நாட்டிய கலாராணிக்குத் தெரியும்..”

சித்திராங்கதாவால் இதற்கு மேல் பேச முடியவில்லை. தேகமும் உள்ளமும் பலமிழந்து போனது. அவள் ஆகாரம் எடுத்தே எத்தனை நாள் என்று யாருக்குத் தெரியும்.

அந்தவேளைதான் ராணியிடம் அவசரமாக ஒரு தகவலை தெரிவிக்க சேவகி ஒருத்தி சிறைவாசலில் வந்து நின்றாள்.

அவள் கொண்டு வந்த செய்தி என்ன? அதை சித்திராங்கதா தாங்கிக் கொள்வாளா?

*‘போரில் சதிகாரர்களால் தஞ்சைவீரன் வருணகுலத்தான் வீரமரணம் எய்தி விட்டானாம்’*

**வருவான்..**



## இலங்கையின் உருளைக்கிழங்கு சிப்ஸ்

முதலாவது ஏற்றுமதி சார்ந்த உருளைக்கிழங்கு சிப் பதப்படுத்தும் தொழிற்சாலை பண்டாரவளையில் நிறுவப்பட்டுள்ளது.

20மில்லியன் ரூபாய் நிதி பங்களிப்புடன் அரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தால் மிகப்பெரிய சந்தைக்குள் இலங்கை செல்வதற்கு வழிசமைக்கும். உலகளவில் உருளை சிப்ஸ் வர்த்தகத்தின் மொத்த பெறுமதி சுமார் 30பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக உள்ளது..

சுமார் 21 பில்லியன் ரூபாய் பெறுமதியான உருளைக்கிழங்கு சிப்ஸ் இலங்கைக்கு இறக்குமதி செய் யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஏற்றுமதி நிறுவனத்தின் வெற்றியானது மேலதிக உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதுடன் இறக்குமதியை குறைப்பதற்கும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாட்டுப் பாடவா...?

படம் : பொன்னியின் செல்வன் - 2
பாடகர்கள் : ஹரிசரன்
இசை அமைப்பாளர் : ஏ. ஆர். ரகுமான்
பாடல் ஆசிரியர் : இளங்கோ கிருஷ்ணன்

சின்னஞ்சிறு நிலவே என்னைவிட்டு
ஏனடி நீங்கினையோ
ஒரு கொல்லைப் புயலடித்தால்
சகியே
செஞ்சுடர் தாங்கிடுமோ

அர்த்தம் அழிந்ததடி அன்னமே
ரத்தமும் ஓய்ந்ததடி
ஒரு கொற்றமும் வீழ்ந்ததடி சகியே
யாதினி கோல் யானே

யாங்குனைத் தேடுவலும் அன்னமே
ஏதினி செய்குவனோ
ஓங்கூழ் ஆனதடி அன்னமே
தீங்கிருள் சூழ்ந்ததடி

துள்ளும் நயனமெங்கே
வெள்ளம்போல்
சொல்லும் மொழிகள் எங்கே
கன்னல் சிரிப்புமெங்கே என்னை
சேர்
ஆரண மார்புமெங்கே

மஞ்சின் நிலங்குளிராய் நெஞ்சிலே
சேர்ந்திடும் கைகள் எங்கே
கொஞ்சும் இளம்
வெய்யிலாய் என்னையே
தீண்டிடும் பார்வையெங்கே

சின்னஞ்சிறு நிலவே
என்னைவிட்டு
ஏனடி நீங்கினையோ

ஒரு கொல்லைப் புயலடித்தால்
சகியே
செஞ்சுடர் தாங்கிடுமோ

கானகம் எரியுதடி வஞ்சியே
ஞாலமும் நழுவுதடி
வானம் உடைந்ததடி அழகே
பூமியும் சரிந்ததடி

கொல்லை நெருப்பினிலே தள்ளியே
எப்படி நீந்தினியோ
எற்றடி கொற்றமுற்றே பிரிவை
சாபமாய் தந்தனையோ

சின்னஞ்சிறு நிலவே என்னைவிட்டு
ஏனடி நீங்கினையோ
ஒரு கொல்லைப் புயலடித்தால்
சகியே
செஞ்சுடர் தாங்கிடுமோ

அர்த்தம் அழிந்ததடி அன்னமே
ரத்தமும் ஓய்ந்ததடி
ஒரு கொற்றமும் வீழ்ந்ததடி சகியே
யாதினி கோல் யானே



## கீரிமலையில் நாவலர்

சிவபூமியில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய ஆறுமுகநாவலர் திருவுருவச்சிலை சிவபூமி அறக்கட்டளை ஊடாக அன்பளிப்பு செய்யப்பட்டு செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களால் சித்திரைப் புதுவருடப் பிறப்பு அன்று(14.04.2023) மாலை கீரிமலை கடற்கரையில் திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையை திரு. ப.மனோகர் அழகுற வடிவமைத்தார். கீரிமலை நகுலேசுவரர் கோயில் புனருத்தாரணம் ஆவதற்கு காரணமான பெருமானாரின் சிலை கீரிமலை மண்ணிலேயே நிறுவப்பட்டமை சாலப் பொருத்தமாகும்.





## வெந்து தணிந்தது நாடு








சித்திரை வெயில் நாடு முழுவதும் சுட்டெரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் எதிர்பாராத மாலை வேளை மழை ஒன்று வடமராட்சி பிரதேசத்தில் 22.04.2023 அன்று உருவாகி, மினி சூறாவளியாகி சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்துச் சென்றுள்ளது. ஆனால் இவ்வாறான திடீர் கனமழைகளால் எவ்வித பயனும் இல்லை. ஆபத்துக்களே அதிகம். இயற்கையை நாம் நேசிக்காத வரை இயற்கை எம்மை நேசிக்கப் போவதில்லை.

## கவிஞனின் வரிகள்

விளை நிலங்களை வேரறுத்து
விலை நிலங்களாக்கினோம்...
தருக்களை தகர்த்து
தளபாடங்கள் செய்தோம்..
ஓசிக்காற்றை ஓரம் கட்டி
ஏசிக்காற்றை ஏலம் எடுத்தோம்...
அறை குளிர்ந்தது...
அறைக்கு வெளியே
அனல் அல்லவா பறக்கிறது...

# சுட்டெரிக்கிறது வெயில்...!



# அதிகரிக்கும் வெயில் காலத்தில் மருத்துவர்கள் கூறும் சில ஆலோசனைகள்

1. அதிகளவு நீர் அருந்துங்கள். குறைந்தது 5L - 3L

2. வத்தகப்பழம், வாழைப்பழம், பப்பாசிப்பழம், ஜம்பு உண்ணுங்கள்.

3. நன்னாரி, வில்வம்பூ, ஆவரசம்பூ குடிநீர்கள் குடியுங்கள்

4. தோல்நீக்கி நன்கு கழுவிய கற்றாளை சாறு (juice), நாரைத்தோடை சாறு குடியுங்கள்

5. காலையில் சிறிது வெந்தயம் நீருடன் உள்ளெடுங்கள்

6. தேவையற்று வெயிலில் திரிவதை தவிருங்கள்

7. இறுக்கமான ஆடைகளை தவிருங்கள்

8. இயன்றவரை மரங்களுக்கு கீழ் இருங்கள்

9. வீட்டு ஜன்னல்களை திறந்து வைத்திருங்கள்

10. காரமான உணவுவகைகளைத் இயன்றவரை தவிருங்கள்.

11. அஜினோமோட்டோ அதிகம் சேர்ந்த துரித உணவுகள், கொத்துரொட்டி என்பவற்றை தவிர்த்திடுங்கள்

12. பழஞ்சோற்று கஞ்சி, இலைக்கஞ்சி, பாற்கஞ்சி என நீராகாரங்களை சேர்த்துக்கொள்ளுங்கள்

13. தயிர், மோர், யோகட் அருந்துங்கள்

## யாழில் திடீர் பரிசோதனை

யாழில் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் பல வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை! யாழ் மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள பல வியாபார மையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது அவ் வேளையில் வியாபாரிகளினால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்த போது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைகளத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 15 வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை, நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற் மேற்கொள்ளப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது.



## உயிர்த்த ஞாயிறு நினைவேந்தல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் 21.04.2023 இடம்பெற்றது. முதலாவது உயிர்த்த ஞாயிறு குண்டு வெடித்த நேரமான 8.42 மணிக்கு தேவாலய மணி ஒலிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்காக இரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.



நினைவேந்தலில் யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் கிறிஸ்தவ மதத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

# 'விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்' ஓவிய கண்காட்சி

அபயம், சிவபூமி அறக்கட்டளைகளுடன் இணைந்து துமி அமையம் 03.04.2023 யா/வட்டு இந்துக் கல்லூரியில் பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப் போட்டியையும் கண்காட்சியையும் நடாத்தியிருந்தனர்.

யா/வட்டு இந்துக் கல்லூரி அதிபர் திருமதி. வதனி தில்லைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்து சிறப்பித்து மாணவர்களின் ஓவியங்களை பார்வையிட்டு இரசித்ததோடு, மாணவர்களை ஆற்றுப்படுத்துகின்ற சிறப்புரை ஒன்றையும் வழங்கி, பாடசாலை நூலகத்திற்கு நூல்கள் சிலவற்றையும் அன்பளிப்பாகவும் வழங்கினார்கள்.

கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட வலிகாமம் வலய வழிகாட்டல் ஆலோசனைப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி. பி. சுதேஷ்குமார் அவர்களும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினார்கள்.

வட்டு இந்துக் கல்லூரியின் சமூக நெறிக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி நிகழ்வில் "விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்" எனும் கருப்பொருளில் மூன்று பிரிவுகளில் எழுபத்தைந்து ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் சித்திர பாட ஆசிரியர்களைக் கொண்ட நடுவர் குழாமால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஓவியங்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வுகள் யாவும் அபயம் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்புடன் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.











ப. டியனி

# சிறந்ததொரு தொழிலாக முயற்சியாண்மை



இலங்கைப் பூர்வீக வரலாற்றின்படி எமது சமுகம் தமக்குத் தேவையானவற்றை தாமே உற்பத்தி செய்து தன்னிறைவானவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். அன்று அவரவர்கள் செய்த தொழில்களை இன்று “முயற்சியாண்மை” என பிரத்தியேகமான துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த வியாபார முயற்சிகள் இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருந்துவருகின்றது. இருப்பினும் வேறு வளர்ந்துவரும் நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மிகக் குறைந்தளவே இவர்கள் இருந்துவருவது குறைபாடாக உள்ளது.

தொழில் முனைவோர் என்பவர் ஒரு நிறுவனத்திற்கு சொந்தக்காரர் ஆவார். அத்தொழில் முயற்சியில் வரக்கூடிய சிக்கல்களுக்கு தம் துணிகர முயற்சி மற்றும் யோசனையைக் கொண்டு செயல்படும் பொறுப்புடையவராக இவர் திகழ்கிறார். இவரை முயற்சியாளர் என்றும் கூறலாம். தொழில்முனைவோர் ஆத்மார்த்தமான விருப்பத்துடன் கூடிய தலைவராக இருந்து நிலம், தொழிலாளி, மற்றும் முதலீடு ஆகியவற்றை இணைத்து சந்தையில் புதிய பொருட்கள் அல்லது சேவைகளை தொடர்ந்து உருவாக்குகிறார். ஆங்கிலத்தில் தொழில் முனைவோர் என்ற பதமானது தனது அதீத முயற்சியின் மூலம் நிறுவனத்தை நடத்தி செல்லும்போது ஏற்படும் விளைவுகள் அனைத்திற்கும் பொறுப்பானவரே தொழில் முனைவோர் எனப்படுகின்றது. அதாவது முயற்சியாளர் என்பதைக் குறிக்கிறது.

1800 ஆம் ஆண்டில் பிரெஞ்சு பொருளாதார வல்லுநர் ஜீன் பப்டைசடே தொழில் முனைவோர் என்ற சொல்லுக்கு புது விளக்கம் அளிக்கலாம் என்று நம்பினார். யார் ஒருவர், குறிப்பாக ஒரு ஒப்பந்ததாரர், ஒரு நிறுவனத்தை எடுத்து நடத்துகிறாரோ தொழிலாளிக்கும் முதலீட்டிற்கும் ஒரு பாலமாக இருக்கிறாரோ அவரே தொழில் முனைவோர் என்று அவர் கூறுகிறார். முயற்சியாண்மை தொடர்பான கோட்பாட்டின் வரைவிலக்கணங்கள் அபிவிருத்திப் போக்கில் இருந்து காலத்துக்குக் காலம் பல வெளியிடப்பட்டுள்ளன. முயற்சியாளர் என்பது பிரேஞ்சு மொழிச்சொல்லின் (Entrepreneur) என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது. பிரேஞ்சு மொழியியல் அறிஞரான Cantllon என்பவர் முயற்சியாளர் என்ற எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தும் போது புதிது புனைபவர், முதல் உற்பத்தியளர், தூண்டுபவர், இடர் தாங்குபவர், உடமையாளர் என விளக்குகின்றார். சில வேளை முகாமையாளர் என்ற பதமும் கையாளப்படுகின்றது.

முயற்சியாளர் சந்தை வாய்ப்புகளைக் கண்டறிந்து தமது மூலதனத்தைத் திறம்பட பயன்படுத்துகிறார். அது மட்டுமல்லாது தன் பகுதியில் நடைபெறும் மாற்றங்களிலும் பங்கெடுத்துக் கொள்கிறார். முயற்சியாளர்கள் தன்னம்பிக்கையுள்ளவர்களாகவும் தொழில் சார்ந்த சவால்கள் மற்றும் நிதிச் சவால்களை எதிர்கொண்டு வாய்ப்புகளைப் பெறுவதில் ஆர்வமுடன் இருப்பவர்களாகவும் கருதப்படுகின்றனர். முயற்சியாண்மை என்ற சொல், வியாபாரத்திற்கான புதிய வாய்ப்பைக் கண்டுபிடித்து, அந்த வாய்ப்பைப் பயன்படுத்த வளங்களைத் தேடி, ஒன்று சேர்த்து, வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்திசெய்து, இலாபம் தேடுவது என்ற நீண்ட விளக்கம் கொண்டது. சந்தை பொருளாதாரங்களில் முயற்சியாண்மை ஏற்படுவது இயற்கை, ஏனெனில் அங்குதான் அதனை வளர்த்தெடுப்பதற்கான சூழல் நிலவுகிறது.

முயற்சியாண்மை ஆபத்து நிறைந்தது, புதிய தொழில்கள் தோல்வியடைவதற்கான வாய்ப்பு அதிகம். எனவே ஆபத்தை தாங்குவது தொழில் முனைவோர்களின் முக்கிய திறன். புதிய கண்டுபிடிப்புகளை சந்தைப்படுத்துவது, தன்னம்பிக்கை, ஊக்கத்துடன் உழைத்தல், இலட்சியத்தை அடையும் தீவிரம், இவை எல்லாம் தொழில் முனைவோருக்குத் தேவை. சிறந்த தொழில் முனைவுக்கு சரியான வியாபார திட்டமிடல் அவசியம். நுகர்வோரின் தேவையைக்



கண்டறிவதும், அதைப் பூர்த்தி செய்ய புதிய வியாபார அணுகு முறையை வடிவமைத்து செயல்பட திட்டமிடல் அவசியம். எனவே, ஒரு புதிய வியாபாரத்திற்கான ஆதி முதல் அந்தம் வரையான வியாபாரத் திட்டம் தேவை.

ஒவ்வொரு வியாபாரத் திட்டத்திலும் முயற்சியாளரின், புதிய வியாபாரத்தின் சிறப்புகள் இருந்தாலும், எல்லா வியாபாரத் திட்டத்திலும் சில பொது அம்சங்கள் இருக்கின்றன. திட்டத்தின் சுருக்கம், வியாபாரப் பொருள் அல்லது சேவையின் விபரம், தொழில் திட்டம், எதிர்கால நிதி நிலை மற்றும், தேவைப்படும் கடன் அல்லது முதலீட்டு அளவு, பொருள்/சேவை சந்தைப்படுத்துவது பற்றிய குறிப்புகள் அவசியமாகும். கடன் அல்லது வெளியிலிருந்து முதலீடு வேண்டும் என்றால் அதற்கான அறிக்கை தெளிவாக இருக்கவேண்டும். கடனுக்கான வட்டியை எந்த காலத்தில் எவ்வளவு செலுத்த முடியும், வெளி முதலீட்டிற்கு எந்த காலத்திலிருந்து ஈவுத் தொகை கொடுக்கப்படும் என்ற விபரங்களும் தேவை.

பொருளாதாரங்கள் வளர முயற்சியாண்மை அவசியம். குறிப்பாக சிறு முயற்சியாண்மை தான் அதிக வேலைவாய்ப்பையும், உற்பத்தியையும் கொடுக்கின்றன. பலருக்கு முயற்சியாண்மை திறன் இருப்பதும், அதனை கண்டறிந்து வளர்ப்பதும், அதற்கான சூழலை ஏற்படுத்துவதும் சமூக பொருளாதாரத முன்னேற்றத்திற்கு முக்கியம். இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முயற்சியாண்மையானது பிரதான பங்களிப்பினை வழங்குகின்றது. குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் சிறிய, நடுத்தர கைத்தொழிலினூடாக பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

கைத்தொழில் அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கல் ஆகிய குறிக்கோள்கள் முயற்சி யாண்மையின் அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளன. ஆகவேதான் முயற்சி யாண்மையானது கைத்தொழில் அபிவி ருத்திக்கான உள்ளீடாக அமைகிறது. அதன் வெளியீடாக பொருளாதார அபிவிருத்தி, வேலை யற்ற இளைஞர்களுக்கான புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கல், தலா வருமானத்தை அதிகரித்தல், உயர்ந்த வாழ்க்கைத் தரம், அதிகரித்த தனிநபர் சேமிப்பு, வரி



வருமானம் மற்றும் சமமான பிரதேச அபிவிருத்தி என்பனவற்றைப் பெற முடியும்.

முயற்சியாண்மையானது புதிய வணிகங்களைத் தோற்றுவிப்பதனால் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றது. இந்நிலைமை பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமையும். குறிப்பிட்ட வணிகத்தின் அல்லது துறையின் உருவாக்கமானது அது சார்ந்த ஏனைய வணிகங்களுக்கு அடித்தளமிடுவதுடன் அது மேலும் பொருளாதாரத்திற்கு வலுவூட்டும். உதாரணமாக இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தின் அறிமுகமானது அதனுடன் இணைந்த தகவல் அழைப்பு மையம், வலையமைப்பு மற்றும் மென்பொருள், வன்பொருள் வழங்குனர் சேவைகள் என்பன தழைத்தோங்க வழிவகுத்தது. மிக முக்கியமாக தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஏனைய ஏராளமான துறைகள் இன்னும் நன்மையடைகின்றன.

முயற்சியாண்மையானது நாட்டின் தேசிய வருமானத்திற்குப் பங்களிப்பு செய்கின்றது. முயற்சியாளர்களினால் அறிமுகம் செய்யப்படும் புதிய கண்டுபிடிப்புகள், மேம்படுத்தப்பட்ட பொருட்கள், சேவைகள் என்பன புதிய சந்தையை உருவாக்கவும் அபிவிருத்திக்கும் வருமானத்தை அதிகரிக்கவும் துணை புரிகின்றன. அரசினால் இத்தேசிய வருமானம் ஏனைய பின்தங்கிய துறைகளிலும் மனித மூலதனத்திலும் முதலீடு செய்ய உதவுகின்றது.




எவ்வாறு முயற்சியாண்மையானது பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துகின்றதோ அதேபோல் சமூக மாற்றத்தினை உருவாக்குவதற்கும் காரணமாய் அமைகின்றது. சமூக மாற்றத்திற்கான முயற்சியாளர்களை பிரதேச மட்டத்தில் இனங்கண்டு வலுவூட்டுவதன் மூலம் முயற்சி யாண்மையினூடாக சாதகமான சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதுடன் பொருளாதாரத்திற்கும், உள்நாட்டு, தேசிய மற்றும் பிராந்திய ரீதியான, சமூகப் பிரச்சினைகளுக்கும் புத்தாக்கத் தீர்வுகளை வழங்குகிறது. சமூக முயற்சியாண்மை கொள்கை வகுப்பாளர்களுக்கும், அக்கறை செலுத்துபவர்களுக்கும் நன்மையளிப்பதுடன் சமூக மற்றும் சூழல் முறைமையையும் பலப்படுத்துகிறது.

மேலும் முயற்சியாளர்கள் சமூக அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்தல் மற்றும் நிதி உதவிகளை வழங்குவதினூடாக மேலதிக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றனர். இதற்கு உதாரணமாக பில் கேட்ஸ் போன்ற பிரசித்தி பெற்ற முயற்சியாளர்கள்

தமது செல்வத்தினை கல்வி மற்றும் பொதுச் சுகாதாரம் போன்ற நல்ல விடயங்களுக்காக செலவு செய்வதனை இங்கு குறிப்பிடலாம்.

இன்று இலங்கையைப் போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு தொழிலின்மை என்பது பாரிய சவாலாக உள்ளது. இலங்கை மத்திய வங்கியின் 2018 ஆம் ஆண்டறிக்கையின்படி தொழிலின்மை வீதமானது 4.2 ஆகக் காணப்படுவதுடன் வயதினடிப்படையில் நோக்கும் பொழுது 15-19 வயதுப் பிரிவினரின் தொழிலின்மை வீதம் 21.1 ஆகவும் 20-29 வயதுப்பிரிவினரிடையே 13.5 வீதமாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் துடிப்புள்ள ஒரு இளம் சமுதாயம் வேலையற்ற நிலையில் இருப்பதனை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். அதேவேளை பாலின அடிப்படையில் நோக்குவோமாயின் ஊழியர் படையிலுள்ள ஆண்களின் தொழிலின்மை வீதமானது 2.9 ஆக காணப்படுவதுடன் பெண்களின் தொழிலின்மை வீதமானது 6.5 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு பெண்களின் வேலையின்மையானது பாலின சமத்துவமின்மையினை



ஏற்படுத்துவதுடன் பெண் முயற்சியாளர்களை உருவாக்குவதன் தேவையினை உணர்த்துகின்றது. ஆகவே முயற்சியாண்மையினை ஊக்குவித்து முயற்சியாளர்களை உருவாக்குவதன் ஊடாகவே வேலையின்மை வீதத்தை குறைக்க முடியும்.

முயற்சியாண்மையினை ஊக்குவிக்க இலங்கை அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எண்டர்பிரைஸ் சிறிலங்கா எனும் திட்டத்தை முயற்சியாண்மை சமூகத்தை நிறுவுவதற்கான தூரநோக்குடன் உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிறிய நடுத்தர கைத்தொழில் அபிவிருத்தி, புதுப்பிக்கத்தக்க சக்தி உருவாக்கமும் அவற்றை மேம்படுத்தலும், விவசாய சமூகத்தை வலுப்படுத்தலும் மற்றும் வறுமையை ஒழித்தலும், இளைஞர் மற்றும் யுவதிகளை வலுப்படுத்தல், ஏற்றுமதியை மேம்படுத்தலும் விநியோக சங்கிலியை விருத்தி செய்தல் மற்றும் சுற்றுலா கைத்தொழிலை மேம்படுத்தல் ஆகிய குறிக்கோள்களை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 100,000 முயற்சியாளர்களை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும்.

உள்நாட்டு முயற்சியாளர்களை உலக சந்தைக்குள் நுழைவதற்கான இயலுமையை வழங்குவதற்காக தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினூடாக ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்குகின்றது.

எவ்வாறாயினும் 2018ம் ஆண்டின் உலக முயற்சியாண்மைச் சுட்டியின் பிரகாரம் இலங்கை 137 நாடுகளிடையே 90வது நிலையில் உள்ளது. இச்சுட்டியானது 14 உபகூறுகளைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இவற்றில் அதிகூடிய பங்களிப்பை 95 வீதத்தால் உற்பத்தி புத்தாக்கமானது வழங்குவதுடன் ஆகக் குறைந்த பங்களிப்பை தொழிநுட்ப உறிஞ்சல் 5 வீதமாகவும் வழங்குகின்றது. எனவே இலங்கை அரசானது முயற்சியாண்மை செயற்பாட்டில் தொழிநுட்ப ரீதியான ஆலோசனைகளையும் வளங்களையும் வழங்குவதனூடாக இச்சுட்டியில் மாத்திரமன்றி நாட்டின் பொருளாதாரத்திலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம்.

சுயமுயற்சியாண்மையானது ஒரு சிறந்த வியாபார முயற்சியாகவே என்றும் கருதப்படுகின்றது. இது எந்த வயதானாலும் முழு சவால்களையும் மற்றும் ஆபத்துக்களையும் ஏற்றுக்கொள்ளும் தைரியத்தினைக் கொடுக்கும். கடினமாகவும் மேலதிகமாகவும் தமது நேரத்தினைப் பயன்படுத்தி உழைப்பவர்களே அதிக மகிழ்ச்சியாக இருக்கின்றனர். அதுபோல இங்குள்ளவர்கள் எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி நிதியைக் கையாளுதல், முடிவெடுக்கும் சக்தி, புதிய எண்ணங்களை பரிட்சிப்பதற்கான சுதந்திரம் இவை அனைத்துக்கும் மேலாக சுயதிருப்தி ஆகியன நாம் சுயமாகத் துவங்கும் வேலையில் அல்லது தொழிலில் கிடைக்கும் நன்மைகளாகும். இன்னொருவருக்கு கீழே வேலை பார்க்க விரும்பாத ஒருவருக்கு இந்த தொழில் முயற்சியாண்மை ஒரு இலகுவான விடயமாக இருக்கும். ஏனெனில் ஒரு வெற்றிகரமான முயற்சியாளன் தனக்கு விரும்பிய பல நடவடிக்கைகளை, மாற்றங்களை மற்றும் வளர்ச்சியை செய்யக் கூடியவர்களாக இருப்பர்.

இன்னும் எமது கண்ணுக்கு தெரியாத பல காரணங்கள் தொழில் முயற்சியாண்மையின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்கின்றன. அதில் முக்கியமானதொன்று ஒருவர் எந்தவித அச்சமும் இன்றி துணிவுடன் தோல்வியே இல்லாமல் திட்டமிடலுடன் எடுக்கப்படும் நடவடிக்கைகளாகும். அதேநேரம் தொழில் முயற்சியாளர் அவருடைய வியாபாரம் தொடர்பாக பரிபூரண விழிப்பும் மற்றும் தெளிவும் கொண்டிருத்தல் மிக முக்கியமாகும். சிறுவியாபாரத்தினை துவங்குவதாக இருந்தாலும் அந்த வியாபாரத்தின் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள், நிதித்தகவல் நிலவரங்கள் எம்மிடமுள்ள வரவுசெலவுத்திட்டம், நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆபத்துக்கள் போன்றவற்றுடன் இன்னும் தொடர்புடைய பல விடயங்கள்



கவனத்தில் கொள்ளவேண்டியது மிக அவசியமாகும்.

முயற்சியாண்மையானது பொருளா தாரமொன்றில் முக்கியத்துவம் பெறுவதாக அமைகின்றது. நாட்டில் பயன்டுத்தப்படாமல் காணப்படும் வளங்களை உற்பத்தித்துறையில் உட்புகுத்தி வினைத்திறனாக செயற்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தலாம். முதலாளித்துவ பொருளாதாரமொன்றில் தனி யுரிமையின் செல்வாக்கினை தடுத்து போட்டி நிலைமைகளை உருவாக்கி அதன் மூலம் பொருளாதாரத்தினை மேம்படச் செய்யலாம், ஊழியச் செறிவுடைய உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதன் மூலம் அதிகளவான வேலைவாய்ப்பு வசதிகளை வழங்கல், நாட்டில் பல்வேறு பிரதேசங்களுக்கிடையில் சிறிய அளவில் காணப்படும் வளங்களை உற்பத்தித் துறையில் ஈடுபடுத்தல், வரையறுக்கப்பட்ட சந்தையையுடைய வியாபார செயற்பாடுகளில் நிறுவன கருமங்களை செயற்படுத்தல், அரசாங்கத்தின் மாற்றமடையும் பொருளாதார கொள்கைக்கு



ஏற்ப இசைவான சிறியளவான நிறுவனங்களின் செயற்பாடுகளை உறுதிப்படுத்தல், பாரம்பரிய உற்பத்தி முறைகளைப் பாதுகாத்தல், அந்நியச் செலாவனியை குறைந்தளவு பயன்படுத்தும் நிறுவன கருமங்களை விருத்தியடையச் செய்தல், குறைந்தளவு மூலதனத்துடன் வியாபார முயற்சிகளை உருவாக்கல், சிறிய நடுத்தர நிறுவனங்களின் செயற்பாட்டிற்கு அரசினால் வழங்கப்படும் உதவிகளையும் ஊக்குவிப்புக்களையும் சிறந்த முறையில் பயன்படுத்தல், உள்நாட்டு தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் துறைகளை விருத்தியடையச் செய்தல், பேரளவு உற்பத்தி நிலையங்களை நிறுவுதலுக்கு அடிப்படையை வழங்குதல்.

மூலதனப் பற்றாக்குறை, தொழில்நுட்பம் பற்றிய பற்றாக்குறை, சந்தை சம்பந்தமான சாத்திய எண்ணக்கருயின்மை, சந்தை பற்றிய பழக்கமுடையவரின் பற்றாக்குறை, வியாபாரம் பற்றிய அறிவின்மை, ஊக்கப்படுத்தல் இன்மை, நேர அழுத்தம் அல்லது குழப்பமான நிலை, சட்டஒழுங்கு விதிகளின் இறுக்கமின்மை, தனியுரிமை பாதுகாப்பு சட்டத்தின் இறுக்கமான தன்மை என்பன ஒரு முயற்சியாண்மைக்கு தடையாக அமைந்திடினும் மேலும் சில பிரச்சினைகளும் காணப்படுவதனை நோக்கலாம்.

முகாமைத்துவ பிரச்சினை அல்லது குறைபாடு என்ற வகையில்

முயற்சியாளனுடன் நேரடியாகத் தொடர்புபட்ட பிரச்சினையே முகாமைத்துவ பிரச்சினையாகும். அதாவது முயற்சியாளன் குறித்த சந்தை வாடிக்கையாளரை அடையாளம் காணமுடியாமை. விலையிடல் உபாயங்களை தேர்ந்தெடுப்பதில் போதிய அறிவின்மை காணப்படல். வியாபார அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் பகிர்ந்தளிக்க முடியாததுடன் எதிர்காலம் தொடர்பான போதிய திட்டமிடல்களை செயற்படுத்தாமை என்பன முகாமைத்துவ குறைபாடுகளுக்கு இட்டுச் செல்பனவாக அமைகின்றன. போதிய நிதி வசதியின்மையும் நிதி நிறுவனங்களால் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படும் நிதி யானது எல்லா முயற்சியாளர்களை சென்றடையாமையும் காணப்படு கின்றது. இதனால் நிறுவனங்கள் நிதிப் பிரச்சினையை எதிர் கொள்கின்றன.

சந்தைப்படுத்தல் பிரச்சினை என்று கூறும் பொழுது சிறிய உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருளுக்கான விலை தளம்பல் அடைவதனாலும் அவற்றிற்கான போட்டிப் பொருட்கள் அதிகளவில் காணப்படுவதனாலும் இம்முயற்சியாளர்களின் உற்பத்தி முயற்சிகள் பாதிப்படைகின்றன. வணிகத்தில் புதிதாக நுழைபவர்கள் உத்வேகம் பெற அதற்குரிய வழிகாட்டிகளைப் அவதானிக்க வேண்டும். அதற்கு ஒவ்வொரு தொழில் தலைவர்களின் வெற்றிக் கதைகள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.



வழிகாட்டிகளைக் கொண்டிருக்க, ஒருவர் அவர்களை தனிப்பட்ட முறையில் அறியாமல் இருப்பது சிறப்பானது. எழுச்சியூட்டும் கதைகள் மற்றும் சுயசரிதைகளைப் படிப்பது இவ்வர்த்தகத்தில் உண்மையான பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கான சிறந்த முறைகளில் ஒன்றாகும். உண்மையில், ஒரு நபர் கல்வியில் இருந்து கற்றுக் கொள்ளும் அனைத்து கோட்பாடுகளையும் விட வெற்றிகரமான தலைவர்களைப் படிப்பதன் மூலம் அதிக தகவல்களைச் சேகரித்து அறிவைப் பெறலாம்.

எனவே, வீழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, தனிநபர் பொருளாதாரத்தையும் மீட்டெடுக்க முயற்சியாண்மை மிகச் சிறந்த வழி என்பதை இந்தக் கட்டுரை பரிந்துரை செய்கிறது. ஆழமறிந்து காலை விட்டால் அதிக இலாபங்களைப் பெறலாம்.













# கருகம்பனை மண்ணின் சித்திரைக் கொண்டாட்டம் 2023












## கவிஞர் முல்லையின்


# கண்ணீரில் கரைந்த தேசம்

### ஓர் அறிமுக நோக்கு

பொ. சிறீஜீவகன்,
தலைவர்,
தமிழ் எழுத்தாளர் சங்கம்,
யேர்மனி.




இளம் எழுத்தாளர், இளவல் சதீஸ் முருகையா அவர்கள், எழுத்தில் புதுமைகளைப் புகுத்தும் எழுத்தாற்றல் கைவரப்பெற்ற ஆசிரியராகத் திகழ்கின்றார். இவர் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை: திரியாய்க் கிராமத்தின் பாரம்பரியத்தில் தோன்றியவர். ஆயினும் போர்ச்சூழல் தந்த இடப்பெயர்வினால், வன்னி மண்ணில் பிறந்து வளர்ந்தவர். வன்னி மண் பலவிதத்திலும் இவருக்குப் பல அனுபவங்களையும், ஆளுமைகளையும் வழங்கியுள்ளது. சிறுவயதிலிருந்தே பல ஆற்றல்களையும் பெற்று வளர்ந்து வருகின்றார். சிறப்பாக எழுத்தாற்றல் மிக்க இவர், அதில் தன்னை ஈடுபடுத்திச் சிறப்பான படைப்புக்களை எழுதுபவர். பள்ளிப் பருவத்திலிருந்தே நாடகம், கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றை எழுதத் தொடங்கியவர். இன்று இளைஞனாக இளந்துடிப்புடன் புதியபுதிய உத்திகளைக் கைக்கொண்டு பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குகின்றார்.



அண்மையில் இவர் "ஆறிப்போன காயங்களின் வலிகள்" (2021) என்ற கவிதை நூலையும், "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு" (2022) என்ற ஆய்வுக் கட்டுரை நூலையும் எழுதியுள்ளார். இதில் "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு" என்ற ஆய்வுநூல் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலின் வெளியீட்டு விழா கடந்த 25.06.2022ஆம் திகதி யேர்மனி, டோட்முண்ட் நகரத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் சதீஸ் முருகையா அவர்கள் மெய்நிகர்வழியாகப் பங்குகொண்டு கண்ணுற்றதோடு, ஏற்புரையினையும் வழங்கியிருந்தார். இவ்விழாவில் இவரின் "ஆறிப்போன காயங்களின் வலிகள்" என்ற கவிதை நூலின் பார்வையும், அறிமுகமும் இடம்பெற்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

இவ்வரிசையில் இவரால் எழுதப்பட்ட "கண்ணீரில் கரைந்த தேசம்" என்ற நாவல் பெரும் சிறப்புக்குரியதாகும். இந்நூலினையும் "யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்" மூலம் வெளியீடு செய்வதற்கு முன்வந்த ஆசிரியருக்கு மனம் மகிழ்ந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நாவல் இலங்கைத் தேசத்தில் வாழ்ந்த தமிழ்மக்களின், விடிவை நோக்கிய நீண்ட நெடிய போராட்டப் பயணத்தில் நடைபெற்ற சம்பவங்களின் வரலாற்று நிகழ்வுகளை, நிழலாக இருந்து உண்மைகளைக் கூறும் கதையாக அமைந்துள்ளது. பகலவன் ஒளியில் பகீரெனத் தெரியும் வெளிச்சம்போல் இந்நாவலும் நடந்தவற்றைத் தெளிவாக எடுத்துக்கூறும் கதையாக அமைந்துள்ளமை மிகச்சிறப்பானதாகும்.

இந்நாவல் முழுமையும் ஒரு கதை சொல்லியின்மூலம் சொல்லப்படும் கதையாக உருவாக்கம் பெற்றுள்ளது. போர்க்காலச் சூழலில், பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சிறிய வயது மாணவனே கதை சொல்லியாக உள்ளான். அந்த மாணவன், தான் நடந்து - கடந்து வந்த பாதைகளில் நடந்தவைகளையும், கண்டவை



களையும், கேட்டவைகளையும் தானே சொல்லுவதாகவும், தன்னுடனும், மற்றவர்களுடனும், அக்கம்பக்கத்தில் சேர்ந்து கதைத்தவர்களின் உரையாடல்களையும் விளம்பி, நாவலை இறுதிவரை நகர்த்தியிருப்பது புதுமையும், சிறப்புமாகும்.

போர்க்காலச் சூழலில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையில் நடந்த உண்மைகளைச் சொல்லும் தன்மையும், போர் நடந்த களங்களில் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், விரக்திகள், சுமைகள் போன்றவற்றை வெளிப்படையாகக் கூறிய தன்மைகளும், இது ஒரு நியக்கதை என்பதைத் தெளிவாக்கியிருக்கின்றன. “போர்வெடியின் ஓசைகளில் வாழ்ந்தவர்களுக்கு எங்கிருந்து பயம் வரும்?” என்ற வினாவின்மூலம், “அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே! உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதினும், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே” என்ற பாரதியின் பாட்டில் வாழுகின்ற மக்களின் பயமில்லாத் தன்மையை ஆசிரியர் ஆணித்தரமாகக் காட்டுகின்றார்.

“உண்மையில் போர் உக்கிரமடைந்து, அன்றைய நாட்களில் குடில்களுக்கு மேலே விழுந்து வெடித்து, அங்கிருந்தவர்கள் இறந்தாலோ, காயப்பட்டாலோ உறவுகள் மட்டுமே அந்த நேரத்தில் இருப்பார்கள். தப்பிய குடும்ப உறுப்பினர்கள் இறந்தவர்களை அதிலேயே அடக்கம் செய்துவிட்டுக் காயப்பட்டவர்களோடு வேறு இடம் நோக்கிச் செல்லும் நிலையையே பின்பற்றினார்கள். எங்கு பார்த்தாலும் ஒப்பாரியே மிஞ்சியிருந்தது. இதனால், தானும் தன்னைச் சார்ந்த குடும்பமும் தப்பினாலே போதுமென்ற மனநிலையே உருவாகியிருந்தது. எல்லா வீடுகளிலும் துன்பம் இருந்ததால், யார் துன்பத்தை யார்தான் ஆற்றிவிடப் போகிறார்கள்?” என்ற வரிகள் போன்று, அகதிகளான - அனாதைகளான மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தைக் காட்டும் பல வரிகள் இந்நாவலில் செறிந்துள்ளன.

போர்க்கால உண்மையைக் கூறும் அனுபவ வெளிப்பாடாகவே இந்நாவல் அமைந்துள்ளது. ஈழத்தில் நடந்த இறுதிக்கட்டப் போரின் உண்மைகளை நம்மவர்களுக்கு மாத்திரமன்றி, உலகத்திற்கே சொல்லும் சாட்சிப்பதிவாக இந்நாவல் விளங்குகின்றது. எதிர்காலச் சந்ததியினர் இந்நாவலை வாசிக்கும் சந்தர்ப்பத்தில், இலங்கையில் வாழ்ந்த தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத் தன்மைகளையும், மக்கள் எதிர்கொண்ட அவலங்களையும் அறியகூடியதாக இருக்கும். ஈழத்துப் போரியலைப் பேசும் இந்நாவல், ஈழத்திலக்கிய உலகில் என்றும் நிலைத்திருக்கும்.



# இலங்கைக்கு ஏப்ரல் மாதம் வந்த பிரபலங்கள்





பிரபல ஆங்கிலத் திரைப்படமான பெட்மேன் பட நாயகன் Christian Bale சுற்றுப்பயணமாக ஏப்ரல் மாதம் 2023 இலங்கைக்கு வந்துள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுடைய மகன் ராம்குமார் ஏப்ரல் மாதம் இலங்கை வந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார். சிவாஜி கணேசன் பற்றிய ஆய்வு நூல் வெளியீடும் யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.






இந்தியாவின் பிரபல நடிகரான யாஷ் என அறியப்படும் நவீன் குமார் கவுடா படப்பிடிப்பு களுக்காக இலங்கைக்கு ஏப்ரல் மாதம் வந்துள்ளார்.





விஜய் டி.வி. சூப்பர் சிங்கர் புகழ் பாடகர்களான சாம் விஷால், ஸ்ரீதர் சேனா, மூக்குத்தி முருகன், மானசி, ஹரிபிரியாவுடன் கலக்கப்போவது யாரு புகழ் காமெடி நடிகர் குரேஷியும் யாழ்ப்பாணம் வருகை தந்து ஈழத்து கலைஞர்களுடன் இசை நிகழ்வொன்றில் 28.04.2023 கலந்து கொண்டனர்.






பங்குனி உத்திரம் நடந்து மூன்று நாட்கள் கடந்து விட்டது. ஆனால் சரோஜா அன்று நடந்தது எதையும் பற்றி எதுவுமே வாய் திறக்கவில்லை. தங்கள் காதல் பரிமாறப்பட்ட சந்தோசத்தைக் கூட அந்த ஜோடிகளால் கொண்டாட முடியவில்லை. தாயிடம் முறையாக அகப்பட்டு விட்டோம் என்பதை உணரமுடிகிறது. ஆனால் தாய் அது பற்றி எதுவுமே கேட்கவில்லை. மாறாக தங்களையும் தங்கள் காதலையும் காப்பாற்றியிருக்கிறாள்.

இந்தக் குழப்பங்களிலிருந்து விடுபடாவிட்டால் கௌசல்யாவுக்கு பைத்தியமே பிடித்து விடும் போல் இருந்தது. நான்காம் நாள் காலை மரக்கறி வாங்க சந்தைக்குச் செல்ல ஆயத்தமான தாயுடன் தானும் செல்வதற்கு கௌசல்யா புறப்பட்டாள். எதற்காக கௌசல்யா வருகிறாள் என்பதை புரிந்து கொள்ள முடியாதளவிற்கு சரோஜா குழந்தையில்லைத்தானே.

"நீ ஆசைப்பட்டது நடக்கணும் என்டா கொஞ்சம் பொறுமையா இரு. என்னை நம்பு. மற்றபடி இப்ப எதுவும் கேக்காதே. "

என்று சொல்லிவிட்டு கௌசல்யாவை விட்டு விட்டுத் தனியாகவே சந்தைக்கு சென்றாள் சரோஜா. குழப்பம் தீரா விட்டாலும் அம்மா தந்த நம்பிக்கை அப்போது அவளுக்கு போதுமாய் இருந்தது. ஆனால் அந்த நம்பிக்கையோடு தான் அவள் ஐந்து ஆண்டுகள் கடக்க வேண்டுமென்று அவளுக்கு அப்போது தெரியவில்லை.

இடையில் கௌசல்யாவின் பிடிவாதத்தால் பரதன் தன் பெற்றோருக்கும் சொல்லி சம்மதத்தை வாங்கியிருந்தான். ஆக இன்றுவரை இவர்களின் காதல்கதை தெரிந்தவர்கள் என்றால் கௌசல்யாவின் அம்மா சரோஜா, பரதனின் அம்மா பரமு, பரதனின் அப்பா பரியாரியார். இந்த மூவருக்கும் தான் தெரியும்.

கொழும்பு கம்பஸ்ஸில் கொம்புயூட்டர் படிப்பு கிடைச்சதால கௌசல்யா அங்க போனதால பரதன் அவளை இப்ப அடிக்கடி பார்ப்பதில்லை. அதாலயும் தான் பரியாரியார் தான் போகாம பரதனை ஆச்சிக்கு வைத்தியம் பார்க்க அனுப்பி வைத்தவர். ஆச்சிக்கு உடல்நிலை சரியில்லாததால் கௌசல்யா வந்திருக்கிறாள் என்பது பரியாரியாருக்கு தெரிந்திருந்தது. ஆச்சியை மருத்துவம் பார்க்கப் பரியாரியார் போகாததற்கு அவருக்கும் உடம்பு சரி இல்லாததும் காரணம் தான் என்றாலும் நீண்ட நாட்களின் பின்னர் கௌசல்யாவை பார்க்கட்டும் என்றுதான் பரியாரியார் பரதனை அனுப்பி வைத்திருந்தார்.

அங்கே அய்யர் வீட்டில் நீண்ட நாட்களின் பின்பு அந்த கண்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. நான்கு கண்களும் குளமாகிவிட்டன. ஆச்சியைப் பார்க்க வந்தவர்கள் யாரும் நல்லவேளை இவர்களை பார்க்கவில்லை. ஆச்சிக்காக கௌசல்யா அழலாம் வைத்தியம் பார்க்க வந்த பரதன் அழுவது தான் மூன்றாம் ஆளுக்கு அதிசயமாகத் தெரியும். பிறகு அந்த அழுகைக்கு ஆயிரம் கதை கட்டவென்றே ஊரில் ஒரு கூட்டம் இருக்கிறது. நல்லவேளை, ஒருவரும் பார்க்கவில்லை.

பரதனால் நீண்ட நேரம் அய்யர் வீட்டில் இருக்க முடியவில்லை. இவ்வளவு நாளாக சேமித்து வைத்த காதலையெல்லாம் கௌசல்யாவிடம் கொட்டித் தீர்த்து விட வேண்டும் போல் இருந்தது. ஆனால் சாதி வெறி பிடித்த ஊர்ச்சனத்திடம் இப்போது பிடிபட்டு விட்டால் தன் காதலை தானே குழிதோண்டி புதைப்பது போலாகிவிடுமென்பதால் அமைதியாக இருந்தான். வந்த வேலையைப் பார்த்து விட்டு விரைவாக வெளியேறினான். அவன் உடம்பு தான் வெளியேறியதே தவிர உயிர் அங்கே தான் இருந்தது.

அந்த இறுகிய மனத்தோடும், நனைந்த விழியோடும் வந்தவனைப் பார்த்துவிட்டுத்தான் இயலாமல் வாங்கில் படுத்திருந்த பரியாரியார் இந்த பழைய கதைகளை எல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்களும் நனையத் தொடங்கின.

அப்போது படலையடியில் ஒரு ஓட்டோ வந்து நின்றது. மகிழ மரக் கொப்பை வெட்ட மகேந்திரம் அனுப்பின ஆட்கள் வந்திருப்பதாக நினைத்தாள் பரமு.

ஆனால் ஆட்டோ அனுப்பியது மகேந்திரம் அல்ல! அய்யர்...!


ஓட்டோக்காரன் சொன்னது எல்லோரையும் தூக்கிவாரிப் போட்டது.

"ஆச்சிக்கு சேடம் இழுக்குதாம்... ஐயா உங்களை கூட்டிட்டு வரச் சொன்னார்.."

அதிரும்....

## அதிகரிக்கும் மரணங்கள்...

ஐரோப்பாவில் வெப்பம் காரணமாக 2022 இல் 15,600 பேர் உயிரிழந்துள்ளதாக உலக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதில் ஜெயர்மன் மற்றும பிரான்ஸ் இல் 4500 க்கும் மேற்பட்ட மரணங்கள் பதிவாகியுள்ளன. கடந்த எட்டு ஆண்டுகளில் இல்லாத அளவு உலக சராசரி வெப்பநிலை கடந்த ஆண்டு பதிவாகியுள்ளது. அத்துடன் கார்பன் டை ஆக்சைட், மெதேன் மற்றும் நைட்டரஸ் ஆக்சைட் ஆகியவற்றின் அளவு தொடர்ச்சியாக அதிகரித்திருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## காவல்துறையில் ரோபோ நாய்

நியூயார்க் நகரில் குற்றங்களை தடுக்க நவீன வழிமுறைகளை அந்நகர காவல்துறையினர் பின்பற்றி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக தற்போது டிஜிடாக்(னுபைனைழப) என்ற ரோபோ நாய் ஒன்றை பணியில் ஈடுபடுத்தியுள்ளனர். இந்த ரோபோ நாய் ரிமோட் கண்ட்ரோல் முறையில் இயக்கப்படுகிறது. சுரங்க நடைபாதைகள், ஆபத்தான பகுதிகள், கட்டுமானம் நடைபெறும் இடங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இந்த ரோபோ நாய் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளது. ஆபத்தில் சிக்கும் மனிதர்களுக்கு உதவி செய்யும் திறன் கொண்ட இந்த ரோபோ நாயிடம் மனிதர்கள் தொடர்பு கொள்ள முடியும். மேலும் தப்பிச் செல்லும் கார்களில் ஜி.பி.எஸ். கருவியை பொருத்தும் எந்திரத்தையும் நியூயார்க் காவல்துறையினர் அறிமுகம் செய்துள்ளனர்.



ஆய்வு அரசர்கள் போட்டியில் முதலாம் இடம் பெற்ற ஆய்வு

3

# மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்



தெ. வஜிதா

பிரச்சினைக்கூற்று

***சமூகக் காரணி***

ஒவ்வொருவரின் அறிவு, உளப்பாங்கு, நடத்தை என்பவற்றைத் தீர்மானிப்பதில் சமூகத்தினுடைய வகிபங்கு முக்கியமானது. அந்த வகையில் கொரோனா வைரஸ் குறித்து சமூகத்தவரது பார்வை ஊடகங்களின் கருத்து, விழிப்புணர்வின்மை, சமூகரீதியான தளர்வு நிலை, மக்கள் சமூகக் கட்டுப்பாடுகளை பின்பற்றாமை, சமூக மக்களின் நோக்கு நிலை என்பன இங்கு முக்கியம் பெறுகின்றன. மாணவர்களின் வாழ்வில் அதிகளவான நேரம் ஊடகங்களின் ஊடாகவே செலவு செய்யப் படுகின்றது. அதிலும் கொரோனாவிற்கு பின்னரான சூழலில் மாணவர்கள் இணையவழிக் கற்கைகளில் கவனம் செலுத்தத் தொடங்கியமை ஆனது மாணவர்களை ஊடகங்களுடன் பிணைத்திருக்கின்றது.

இவ்வாறான நிலையில் பத்திரிகைகளின் மூலமாக செய்திகள் உடனுக்குடன் இணையத் தளங்களிலும், இணைய வழிக் குழுமங்கள் ஊடாகவும் கிடைக்க பெறுவதுடன் அவற்றின் வாயிலாக பலரும் கொரோனா குறித்த விழிப்புணர்வை வழங்குகின்ற அதே நேரம் அதனை ஒரு வேடிக்கை விடயமாகவும் சித்தரித்துக் காட்டுகின்றனர். இது மாணவர்களிடத்தே கொரோனா குறித்த தவறான புரிந்துணர்வுகளையும் ஏற்படுத்துவதோடு அது குறித்த அச்ச உணர்வுகளையும் அதே நேரம் மாணவர்களின் அலட்சியத்திற்கும் காரணமாகி விடுகின்றது.

சமூகத்தில் ஊரடங்குச் சட்டம் போட்ட போதும், இன்றைய நிலையில் கொரோனாவுடன் வாழப் பழகிக் கொள்வோம் என்ற கருத்து நிலையும் மக்களின் வறுமை நிலையும் மக்களை இயல்பான

வாழ்க்கையிலேயே இயங்க காரணமாக அமைகின்றது. இதனால் வழமைபோல் சந்தைகள், கடைகள் திறக்கப்பட்டு வழமை போல் வேலைகள் இடம்பெற்றன. இதனால் மாணவர்களிடம் கொரோனா குறித்த விழிப்புணர்வு இருப்பினும் அவை குறைக்கப்படுகின்றது.

அதே இந்தியா போன்ற நாடுகளில் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக தெரு ஓரங்களில் ஓவியங்களை வரைதல், விழிப்புணர்வுச் செயற்பாடுகளை செய்தல் என்பன இங்கு இடம்பெறுவது குறைவாகவே காணப்படுகின்றது. அதற்கு மாறாக சமூகத்தில் கொரோனா என்பது வெறும் சளிக்காய்ச்சல், சாதாரண நோய் என்ற கருத்து நிலைகள் அதிகம் காணப்படுவதுடன் வறிய மக்களுக்கு கொரோனாவை விட தமது அன்றாட வாழ்க்கையை நடத்துவது குறித்த எண்ணப்பாங்கு அதிகளவு காணப்படுகின்றது. பொதுப் போக்குவரத்துக்கள் எந்தவித முற்பாதுகாப்பும் இன்றி வழமைபோல் இயங்குகின்றன. இதன் காரணமாக பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்கின்ற மாணவர்களுக்கும் சமூகத்தவர்களின் கருத்துக்களை கேட்பவர்களுக்கும் கொரோனா



குறித்த அச்சம் குறைந்து அது சாதாரண நோய் என்கின்ற எண்ணப்பாங்கு அதிகரிக்கின்றது. இந்த வகையில் சமூகத்தில் ஒரு பங்கினரான மாணவர்களினுடைய சிந்தனை, நடத்தை, உளப்பாங்கு என்பவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றது.

## குடும்பச் சூழல்

மாணவர்களின் கொரோனா குறித்த அறிவு, உளப்பாங்கு, நடத்தை என்பதில் குடும்பச்சூழல் பெரிதும் தாக்கம் செலுத்துகின்றது. இந்த வகையில் பெற்றோரின் தொழில், கல்விநிலை, குடும்பத்தின் பொருளாதார நிலை, குடும்ப அங்கத்தவர்களில் ஒருவர் கொரோனா தாக்கத்திற்கு உட்பட்டு இருத்தல் என்பன இங்கு முக்கியம் பெறுகின்றன. குடும்பத்தில் உறுப்பினர்கள் வேலைக்குச் செல்பவர்களாக இருப்பின் அவர்கள் கொரோனா சூழலுடன் வாழ பழகியவர்களாக இருப்பார்கள். இந்த வகையிலே குறித்த ஆய்வு பிரதேசத்தில் மாணவர்களின் பெற்றோர் வேலைக்குச் செல்பவர்களாகவும், விவசாயம் செய்பவர்களாகவும் அதே வேளை கூலி வேலைக்கு செல்பவர்களாகவும் இருப்பதனால் இங்கு கற்கின்ற மாணவர்களின் கொரோனா குறித்த ஆய்வு, நடத்தை, உளப்பாங்கு என்பன வேறுபடுகின்றன.

தமது ஊருக்குள்ளேயே சிறு சிறு கூலி வேலைகளுக்கு செல்லும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு

கொரோனா குறித்த விழிப்புணர்வு பெரிதும் கிடைக்கப்பெறுவதில்லை. அதிலும் அவர்களின் குடும்ப நிலை காரணமாக இணைய வசதிகளையும் பெற்றுக் கொள்ள முடியாமையும் இதற்கான முக்கிய தடையாக காணப்படுகிறது. மேலும் விவசாயம் செய்பவர்கள் தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது கொரோனா குறித்த பல சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. எனவே இவ்வாறான சூழ்நிலைகளில் இருக்கும் மாணவர்களின் கொரோனா குறித்த நடத்தை வேறுபட்டு அமைகின்றது.

### தனிப்பட்ட காரணி

மாணவர்களின் கொரோனா குறித்த நடத்தையில் மாணவர்களுடைய தனிப்பட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்த வகையிலே மாணவர்களின் அறிவுத்திறன் அலட்சியப்போக்கு, சமூகக் கட்டுப்பாடுகளை பின்பற்றாமை, அச்ச உணர்வு, விழிப்புணர்வின்மை என்பன குறிப்பிடத்தக்கவை. இந்த வகையிலே ஒரு விடயத்தை ஆராய்ந்து அறியும் திறனுடைய மாணவர்கள் கொரோனா வைரஸ் குறித்த அதிகளவு அறிவினைக் கொண்டிருப்பதுடன் அதற்கான சிறந்த நடத்தையைக் கொண்டவர்களாகவும் காணப்படுவர். அதே சமயம் புதிய விடங்களை அறிந்து கொள்ளும் ஆர்வம் குறைந்த மாணவர்களிடம் கொரோனா பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதில் குறைவான ஈடுபாட்டினைக் காட்டுவதனால் அவ் மாணவர்களிடம் கொரோனா குறித்த விழிப்பணர்வு மற்றும் அறிவு, உளப்பாங்கு, நடத்தை என்பன வேறுபட்டதாகக் காணப்படும்.

அதே போன்று இன்றைய கால கட்டத்தில் இணையத்தளங்களின் ஊடாக அதிகளவான மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்குப் பதிலாக கொரோனா தொடர்பில் வேடிக்கையான பல காட்சிப்படுத்தல்களை மேற்கொள்கின்றனர். இதனால் மாணவர்களிடம் கொரோனா குறித்த தீவிரத்தன்மை குறைவடைவதுடன் கொரோனா குறித்த கவனயீனமும் ஏற்படுகின்றது. இதனால் மாணவர்களின் நடத்தை உளப்பாங்கு என்பன வேறுபடுத்தப்படுகின்றது.

### பாடசாலைச் சூழல்

இதே போன்று மாணவர்களின் பாடசாலைச் சூழலும் கொரோனா குறித்த மாணவர்களின் அறிவு, உளப்பாங்கு, நடத்தை என்பவற்றில் தாக்கம் செலுத்துகின்றன. நண்பர்களின் சேர்க்கை, கொரோனா குறித்த ஆசிரியர்களின் கருத்து நிலை, தெரிவு செய்யும் பாடம், கட்டுப்பாட்டுத் தளர்வு போன்றன



இதில் முக்கியமானவை. கொரோனா நோய் பரவல் குறித்த தவறான புரிதல் கொண்ட நண்பர்களின் சேர்க்கையானது கொரோனா பற்றிய சரியான தகவல்களை தெரிந்து கொள்வதிலும் உளப்பாங்கிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதே போன்று ஆசிரியர்கள், பாடசாலை ஊழியர்கள் போன்றவர்கள் கொரோனா குறித்துக் கொண்டிருக்கும் கருத்து நிலை மாணவர்களின் கொரோனா குறித்த பார்வையைத் தீர்மானிப்பதாகக் காணப்படுகின்றது. அத்துடன் சமூகத்தில் கொரோனா பற்றிய தெளிவான விளக்கத்தினை மாணவர்கள் கொண்டவர்களாக இருப்பினும் பாடசாலைக்குள் கொரோனாவிற்கான முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றாத போது கொரோனா குறித்த மாணவர்களின் உளப்பாங்கு நடத்தை என்பன பாடசாலைக்குள் மாற்றப்படுகின்ற நிலை ஏற்படுத்தப்படும்.

*ஆராய்வோம்...*

## புதிய தாவரிசை

உலக மக்கள் தொகையில் சீனாவை பின்தள்ளி இந்தியா முதலிடம் பிடித்துள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் உலகின் பணக்கார நகரங்களின் பட்டியலில் நியுயோர்க் நகரம் முதலிடத்தை பெற்றுள்ளது. டோக்கியோ, சான் பிரான்ஸிஸ்கோ, லண்டன், சிங்கப்பூர் ஆகிய நகரங்கள் அடுத்தடுத்த இடங்களை பெற்றுள்ளன.




## பூமிக்கு பூசைகள்



ஏப்ரல் 22, உலக புவி நாளை பெரு நாட்டு மக்கள் பாரம்பரிய முறைப்படி கொண்டாடினர். இதன் போது புவியின் மாதிரிக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பாரம்பரிய வாத்தியங்கள் முழங்க கையில் பாம்பை பிடித்து நடனமாடினர். அத்துடன் இயற்கை வளங்களை பாதுகாக்க வலியுறுத்தினர்.




# உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் 2023

எஸ்.எஸ்.நுஜன்

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் என்பது டெஸ்ட் அந்தஸ்து உள்ள சிறந்த ஒன்பது அணிகள் தலா ஆறு தொடரில் இரு வருடங்களுக்கு விளையாடி இரு வருடங்கள் முடிவில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதி போட்டியில் பலப் பரீட்சை நடத்துவர். கடந்த 2019 இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இதன் முதலாவது சாம்பியன்ஷிப்பின் இறுதி போட்டி 2021 இல் இங்கிலாந்தில் நடைபெற்றது. இந்த இறுதி போட்டியில் இந்தியாவினை வீழ்த்தி நியூஸிலாந்து வெற்றியாளரானது. இதன் இரெண்டாவது சாம்பியன்ஷிப் தொடர்கள் நிறைவுற்ற நிலையில் இதன் இறுதி போட்டிக்கு இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் தேர்வாகியுள்ளனர். இந்தப் போட்டி ஜூன் 7 - 11 ம் திகதிகளில் இங்கிலாந்தின் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் தமது அணிகளை அறிவித்துள்ளனர். அவை வருமாறு:

ஆஸ்திரேலிய அணி - பேட் கம்மின்ஸ் (c), ஸ்காட் போலண்ட், அலெஸ் காரே (wk), கேமரூன் கிறீன், மார்கஸ் ஹாரிஸ், ஜோஷ் ஹஸல்ட்வூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்லீஸ் (wk), உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஸ்சனே, நாதன் லியொன், மிட்செல் மார்ஷ், டாட் மர்பி, மத்தியூ ரென்ஷாவ், ஸ்டீவ் ஸ்மித் (vc), மிட்செல் ஸ்டார்க், டேவிட் வார்னர்





இந்திய அணி - ரோஹித் சர்மா (c), ஸுபிமன் கில், செடேஸ்வர் புஜாரா, விராட் கோஹ்லி, அஜிங்க்ய ரஹானே, KL ராகுல், KS பாரத் (wk), ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, அக்சார் படேல், ஷர்டுல் தாகூர், முஹம்மத் ஷமி, முகமத் சிராஜ், உமேஷ் யாதவ், ஜெயதேவ் உனட்கட்.

ஆஸ்திரேலியா 17 பேர் கொண்ட அணியினை இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடருக்கும் சேர்த்து அறிவித்து இருப்பதால் மே 28 ம் திகதிக்கு முன்னர் தமது 15 பேர் கொண்ட அணியை உறுதி செய்ய வேண்டும். இந்தியா தனது 15 பேர் கொண்ட அணியையே அறிவித்துள்ளது.

எதிர்பார்க்கப் படும் பதினொருவர் அணி வருமாறு:
ஆஸ்திரேலியா - டேவிட் வார்னர், உஷ்மான் கவாஜா, மார்னஸ் லபுஸ்சனே, ஸ்டீவ் ஸ்மித் (vc), டிராவிஸ் ஹெட், அலெஸ் காரே (wk), கேமரூன் கிறீன், மிட்செல் ஸ்டார்க், பேட் கும்மின்ஸ் (c), ஜோஷ் ஹஸல்ட்வூட், நாதன் லியொன்

இந்தியா - ரோஹித் சர்மா (c), ஸுபிமன் கில், செடேஸ்வர் புஜாரா, விராட் கோஹ்லி, அஜிங்க்ய ரஹானே, KL ராகுல் (wk), ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, முஹம்மத் ஷமி, முகமத் சிராஜ், உமேஷ் யாதவ்.

லண்டன் ஓவல் மைதானத்தில் இதுவரை, ஆஸ்திரேலியா 38 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 7 வெற்றி மற்றும் 17 தோல்விகளையும் 14 வெற்றி/தோல்வி அற்ற நிலையையும் பெற்றுள்ள போது இந்தியா 14 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 2 வெற்றி மற்றும் 5 தோல்விகளையும் 7 வெற்றி.·.தோல்வி அற்ற நிலையையும் பெற்றுள்ளது. இரு அணிகளும் பெரிதாக ஆதிக்கம் செலுத்தவில்லை. கடந்த 10 வருடங்களுக்கு பார்த்தால் ஆஸ்திரேலியா சற்று ஆதிக்கம் செலுத்தியுள்ளது.
(ஆஸ்திரேலியா - 6 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 3 வெற்றி, 2 தோல்வி, மற்றும் 1 ட்ராவ் இந்தியா - 3 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 1 வெற்றி மற்றும் 3 தோல்வி)

